ஓலை 177| ஓசை 300| ஜூன் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## மகாகவி சுப்ரமணிய பாரதியார்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

எண்ணியர் எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

## பொருள்

எண்ணியதைச் செயலாற்றுவதில் உறுதியுடையவர்களாக (மனவலிமை மிக்கவர்களாக) இருக்கப் பெற்றால், அவர்கள் எண்ணியவற்றை அவ்வாறே அடையப் பெறுவார்கள். பாரதி கேட்கும் " வல்லமை " (மன உறுதி) இருந்தால் எதையும் சாதிக்கலாம்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# தமிழ்தான் மொழிகளின் தலையே

**பாவகை : அறுசீர் மண்டிலம் (விளம்+மா+ தேமா)**




தனிப்பெரும் உலகின் வானில்
  தனித்தியங் கிடும்கோள் வெய்யோன்
தனித்தலை வனவன் ஆகும்;
  தகுசிறு கொள்ளி யாகா;
பனிமலை இருக்க அந்தப்
  பரங்கியா மலையாய் நிற்கும்?
நனியுல கெலாமே என்றும்
  நற்றமிழ் தலையாய் நிற்கும்!

கனிகளில் பெருந்தி னிக்கும்
  கனிப்பலா தலைமை ஏற்கும்;
இனிப்பினில் பலாவே உச்ச
  இனிப்பென தலைமை யாகும்;
தனித்துமே பிறந்து வந்து
  தனித்துமே இயங்கும் இன்பத்
தனித்தமிழ், இயங்கா மற்ற
  தரைமொழிக் கெலாமே வானம்!




மொழிகளுக் கெலாமே வேர்சொல்
  மொழிந்த தமிழே வைய
மொழிக்கெலாம் தலையே யாகும்;
  மொழிவதோ எலாமே மொத்த
அமிழ்தமே தமிழில் தானே!
  அகரமே தலையாய்த் தாங்கும்
மொழிகளின் தலையே யாகும்;
  முதன்மையாம் தமிழே வாழி!

**நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்**

“ ”

# தன்மையாய் பிறரைத் தட்டியே நிமிர்த்தி

கவிஞர் செ. கலைவாணி

பாவகை : (பத்தடி)நேரிசை ஆசிரியப்பா



இன்ன லுற்றோர் இன்பம் உற்றே
ஒன்னாரை வீழ்த்திய
ஒசிவைப் போக்க
உன்னத நிலையிலே
உவகை கொள்ள
என்றும் ஈந்தே எண்ணப் பட்டே
கன்னல் பேச்சுடன் கடமை ஆற்றிக்
குன்றியே கிடந்தோர் குன்னம் நீக்கி
சன்னதம் விலக்கியே சடுதியில் உதவல்
தன்மையாய் பிறரைத் தட்டியே நிமிர்த்தி
நன்மை செய்யும் நன்னர்
வன்மை இல்லா வள்ளல் போக்கே.

கவிஞர் செ. கலைவாணி

# கிடைத்த நாளில்
# பசியில்லை எனக்கு

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்



ரசம் சோறு
சாப்பிட வாய்த்தநாளில்
குழைந்திருந்து சோறு.
சாம்பார் சோறு
கிடைக்கப்பெற்றநாளில்
சாம்பாரில் உப்பு தூக்கலாய்.
பொரியலோடு
சாப்பிட கிடைத்தநாளில்
பொரியல் கருகியவாடை.
எல்லாமும் சரியாய்
அறுஞ்சுவை விருந்து
கிடைத்த நாளில்
பசியில்லை எனக்கு.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# வாழ்வில் என்றும்
# வானவில் இரசிப்போமோ

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை



# ஒன்னாரைத் தேறேல்

## (பகைவரை நம்பாதே)

ஒன்னாறைத் தேறேல்
ஒன்றாம் ஒழுக்கமன்றோ
நட்பின் முறிவில்
நடப்பவை புரியுமே

கொழுந்து விட்டெரியும்
கொம்புத் தீயாகுமோ
துறந்த உறவில்
துயில்வதும் முறையோ

உன்னதங்களின் நதிகளாய்
உள்ளங்கள் உறவாடுமோ
பகைமை பிறந்ததே
பகுத்துணர்வின் முதன்மையன்றோ



விற்பன்னனாய் வாழ்ந்திட
விதியை நோகலாமோ
நேரிய செயல்களின்
நேயம் வீரியமன்றோ

நலம் விளையாத
நல்லோர் பாரினிலுண்டோ
வாழ்வில் என்றும்
வானவில் இரசிப்போமோ

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# அவள் முறுவலித்தாள்; இதமாக



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

தாயின் புலம்பல்,
தந்தையின் கோபக்குரல்,
முதியவளின் முனகல்,
முதியவரின் இருமல்,
இவ்வளவையும் எதிரொலித்த
அந்த நான்கு சுவர்களும்
பூச்சு உதிர்ந்து விசும்பிய சத்தம்
அங்கே நிலவ
ஒரு நாள்;
கொலுசின் ஜதி,
மெட்டியின் ஒலி,
வளையல்களின் சிணுங்கல்;
சுவர்களில் விழ
சுவர்கள் எதிரொலிக்காமல்
உள் வாங்கி அமைதியானது!
அம்மா சொன்னள்;
'அவன் அறை மட்டிலும்
இதமான தண்மையில்' உள்ளது.
அவன் அவளை ஏறிட்டுப் பார்க்க;
அவள் முறுவலித்தாள்; இதமாக.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# பசிப்பிணி அகற்றும் மொழி



கவிஞர் செ. தமிழ்நேயன்

பகை முரண் போக்கும் முறுவல்
பசிப்பிணி அகற்றும் மொழி
பகல் வெல்ல பனி விலகும்
பூந்தளிர் மெல்லத் தீண்ட.



கவிஞர் செ. தமிழ்நேயன்



**இப்படிச் செய்தது காலத்தின் கோலமா?**
**இல்லை நான் வாங்கிய சாபமா?**

கவிஞர் சுமதி தசரதன், சென்னை

# எதிர்பதமானதே எங்கள் திருமண நாள்!



எதிர்பார்த்த இந்நாள் எதிர்பதமாய் ஆகுமென்று
என்றுமே நான் நினைக்கவில்லையே!
ஒருகனவாய்ப் போனதே என் வாழ்க்கை,
கண்ணீரில் தத்தளிக்கும் பேதையாகிப் போனேனே!
என்னென்னவோ ஆசைகளெல்லாம்
காற்றில் உன்னைப் போலக் கரைந்ததே மாமா!

நானும் நீயும் ஒன்றாய்ப் பயணம் செய்ய
கடவுள் விதித்தது முப்பது வருடங்கள்தானா மாமா?
ஒவ்வொரு வருடத் திருமண நாளுக்கும்
ஒவ்வொரு விதமாய் வியப்பளிப்பது உங்களின் சுபாவம்;
அதில் ஆனந்தப்பட்டோம் நாங்கள்!
ஆனால்
இந்த வருடம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குப்
பெரிய அதிர்ச்சியைக் கொடுத்துவிட்டீர்களே மாமா!

இன்று அதிகாலையில் இருந்தே, நீங்கள் இருந்திருந்தால்
என்ன செய்திருப்பீர்கள் என்று என் மனது அலைபாயுதே மாமா!
நீங்க வாங்கித் தரும் பரிசுகள், அடுத்த வருடம் வரை
நாங்கள் பேசும்படி இருக்குமே மாமா!

இந்த வருடம்
இமைமூடித் திறக்கும்முன் இல்லாமல்
போனதேன் மாமா?
இனி காலத்திற்கும் என்னை அழவிடுவதுதான்
இந்த வருடப் பரிசோ? ஏன் மாமா?

கடந்த வருட நினைவுகள் நிழற்படமாய் இருக்கிறது...
கண்ணாடிச் சட்டத்தில்!
இந்த வருடம் நீங்களே நிழற்படமாய்
கண்ணாடிச் சட்டத்தில் அடைபட்டது ஏன் மாமா?

எப்போதுமே நினைத்துப் பார்க்க முடியாத வியப்பைத் தருவதுபோல,
உங்கள் இழப்பும் நினைக்க முடியாத மறைவாய் போனதேன் மாமா?
அன்று பட்டாம்பூச்சியாய்ப் பறந்தவள் நானே மாமா
எல்லாப் பக்கமும் எனது தடத்தைப் பதித்தேன்;
அதைக் கண்டு ஆனந்தப்பட்டன உங்கள் விழிகள்!

இப்போது உங்கள் விழிகள் காணாத எனது வளர்ச்சி
எனக்கு வேண்டாம் மாமா!
இப்போது நீயின்றிச்
சிறகொடிந்த பறவையாகிப் போனேனே மாமா!
இப்படிச் செய்தது காலத்தின் கோலமா?
இல்லை நான் வாங்கிய சாபமா?

கவிஞர் சுமதி தசரதன், சென்னை



“ தந்தையுள்ளம் களிப்பாகியே
தாய்மையைப் போற்றியதே ”

கவிஞர் ஏப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# நிறைமாத நிலவே வா வா



அன்பான தாம்பத்திய
வாழ்வு இனிதானதே

ஆசையின் எண்ணமது
அரங்கேற்றம் ஆனதிங்கே

இல்லறத்தில் நல்லறம்
பெருகிட மகிழ்வானதே

ஈருடல் ஒருயிராய்
சங்கமித்து உறவானதே

உள்ளங்கள் களிப்புற
உவகைப் பூத்ததே

ஊடலில்லாத வாழ்வில்
ஒன்றிணைந்த இதயங்களே

எண்ணத்தில் வண்ணம்
கலந்திட அழகானதே

ஏகாந்த வேளைதனில்
மௌனம் பேசியதே

ஐக்கியமான உணர்வில்
சந்தோசம் பெருகியதே

ஒன்றிணைந்த மனதில்
இளமையின் இராகங்களே

ஓராயிரம் கவிதைகள்
புனைந்திட்ட இரவுகளே

கருவறையில் கனிவுடன்
மகரந்தம் சேர்க்கையானதே

பிறையும் வளர
வயிறும் மேடானதே

நாட்கள் நகர்ந்திட
கருவும் வளர்ந்ததே

நிறைமாத நிலவே வா வா
தந்தையுள்ளம் களிப்பாகியே
தாய்மையைப் போற்றியதே.

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# சுயநலமில் பெருவெளி அடை
# மனதிலே இறையொளி நிறை

கவிஞர் மரு. ஜுனீனா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)



# சுயநலமில் பெருவெளி!

இன்பமெல்லாம் இன்பம் இல்லை
துன்பமெல்லாம் துன்பமில்லை

எழில் எல்லாம் எழிலில்லை
இழிவெல்லாம் இழிவில்லை

விடிவெல்லாம் விடிவில்லை
இருளெல்லாம் இருளில்லை

அன்பெல்லாம் அன்பில்லை
வீம்பெல்லாம் வீம்பில்லை

வழியெல்லாம் வழியில்லை
வலியெல்லாம் வலியில்லை



மனமென்னும் மாயக்கண்ணாடி
மாற்றி வைத்த காட்சிப் பிழை

உலகெங்கும் ஊழ்வினை மழை
உணர்ந்து நீ தீவினை களை

சுயநலமில் பெருவெளி அடை
மனதிலே இறையொளி நிறை

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# ஊதியமாக கிடைத்த பணத்தில் தீட்டில்லை என்பாரோ

கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, வளையமாதேவி (சிதம்பரம்)



# தீட்டில்லை பணத்தில்

நேற்று கருமாரிக்கு
உடுக்கை வாசித்தவர்
இன்று கருமகாரியத்தில் வாசிக்கிறார்
தீட்டு ஒன்றும் ஆகவில்லையாம்
காரிய வீட்டில் சமைத்த உணவில்
உள்ளதாம் தீட்டு
உணவகத்தில் வாங்கிய
உணவை உண்ணுகிறார்
ஊதியமாக கிடைத்த பணத்தில்
தீட்டில்லை என்பாரோ




கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, வளையமாதேவி (சிதம்பரம்)



“ ”

**யோகாசனம் உடற்பயிற்சிகள்
சுவாசம் உடல் இயக்கத்திற்கு
உத்வேகம் அளிக்கின்றது**

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

# உடற்பயிற்சி

அந்தக்கால உணவில்
நார்சத்து உட்பட பற்பல
சத்துக்கள் இருந்தன



சக்தி மேம்பட்டது பலமடைந்தது
வாழ்வை மேம்படுத்தியது
சோர்வை நீக்கியது எப்போதும்

பயிர் உரங்கள் உப்புகள்
கலப்படங்கள் காலநிலைக்கு
ஏற்காத உணவுமுறை இவையும்

இன்றைக்கு உடற்பயிற்சியின்
அவசியத்தை அறிவுறுத்துகிறது
சிறிதளவாவது சக்தி வேண்டி

யோகாசனம் உடற்பயிற்சிகள்
சுவாசம் உடல் இயக்கத்திற்கு
உத்வேகம் அளிக்கின்றது

மன ஒருமைப்பாடு அழுத்தம்
இரத்த ஓட்டம் இவைகளை
சீரான பாதையில் அமைக்கும்

மூட்டுகள் தசைகள் செயல்பாடு
இதனால் அதிகரித்து நோயற்ற
வாழ்வினுக்கு வழி காட்டும்

உடல் நெகிழ்வுத் தன்மை
அடைதல் ஆடுதல் பல்வேறு
செயல்கள் புரிய உதவுகிறது

திரை ஒளியில் வாழ்வுகழிக்கும்
மனிதர்களுக்கு இஃது மிகவும்
அத்தியாவசியமான ஒன்று

புதிய கோணங்களில் சிந்திக்க
கலாச்சார புரிதலுடன் மனிதன்
நேயத்தோடு வாழ அவசியமிது

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

" ஓரக் கண்ணால் அன்று பார்த்த பார்வையில்
மீளாதிருக்கிறேன் நானும் "

கவிஞர் திருமதி. ஜீவனித்ரா கிறிஸ்வி, கல்முனை (இலங்கை)



# உன் பார்வையின் அர்த்தம்

பார்வை ஒன்றே உன்னைச் சொல்லுகிறது
கருணையா? காதலா?
உன் பார்வையில் நான் காண்பது?!



கருணை என்றால்
என்னோடு நீ சண்டை யிடுவது
காதல் என்றால்
ஊடல் கொண்டு
என்னோடு நீ பேசிக்கொள்வது?
தினம் தினம் எனக்கும் உனக்கும்
ஏன் சமர்?

உறவுகள் பலவகை
உடனிருந்து எனக்குள்ளே
கேள்விக்கணை தொடுத்து நிற்கும் பார்வை
தொலைந்து போகிறேன் நான்!

உனது பார்வை பல்லாயிரம் செய்திகளை
மனக் கண்முன் கொண்டுவர
மனதளவில் மண்டியிடுக்கின்றேன்
மீண்டும் மீண்டும் அதே பார்வையில்படாதபடி!


ஓடி... ஓடி விலகினாலும்
ஓரக் கண்ணால் அன்று பார்த்த பார்வையில்
மீளாதிருக்கிறேன் நானும்
அந்தப் பார்வையில் மீண்டும்!சிக்காதப்படி!

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)



# மீண்டும் காதல் பாடம் படிப்போம்
# பறந்து விரைந்து வா கண்ணா

கவிஞர் முஹமட் ரபீக் ஜக பானு, இலங்கை



# உறங்காத நினைவுகள்



கரம் பிடித்து எனை அணைத்த
என்னரசன் வெளிநாடு சென்றது ஏனோ
குளிர்காலம் குதூகலிக்கக் குமரியின் இதழ்
தவிக்க நீ போனது நியாயமோ

ஈருடல் ஒருடலாய் சில நாட்கள்
சிலிர்க்க மனதை மகிழ்வித்தது
கண்ணாம்பூச்சியாட்டமோ

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டு
என்னைத் தவிக்க விட்டு ஓட்டமோ
என் வாட்டம் புரியாதா உனக்கு
வாய்விட்டுப் பேசிச் சிரித்து நெடுங்காலமாயிற்று

திருமணம் முடித்து ஈராண்டுகள் கடந்தாயிற்று
துயரம் சூழ்ந்த வாழ்வு ஆயிற்று
கழுத்தினில் நீ கட்டிய தாலி
துணையின்றி ஏங்கி வாடிப்போயிற்று

என் தங்கையும் திருமணம் முடித்து
இரு குழந்தைகளை ஈன்றெடுத்தாள்
எனக்கு அக்கம் பக்கம் ஏச்சு
உனக்கு இன்னும் குழந்தையில்லையா பேச்சு

கணவன் நீர் என்னோடு இருந்தால்
வருமா எனக்கு இந்த ஏச்சுப்பேச்சு
காலம் நகர்ந்து போச்சு கண்ணா
காதலியைக் கரம்பிடித்ததை மறந்து போனாயா

கள்ளமில்லா என் வெள்ளக் கண்ணா
வேலை செய்தது போதும் வா
மீண்டும் காதல் பாடம் படிப்போம்
பறந்து விரைந்து வா கண்ணா

நமக்கான விடியலை மீட்போம் வா
நமதிரு குறைகளைத் துடைப்போம் வா
தூரமாக இருந்தது போதும் அன்பே
துறவி வாழ்வை முடிக்க வா

கவிஞர் முஹம்மட் றபீக் ஜகி பானு, இலங்கை




சரிவிகித உணவின் சமரசம் உணர்ந்து
தெரிந்து செயல்படும் செம்மைவழி பெரியோர்களே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# ஊட்டச் சத்துணவு

குழந்தை வளர்ச்சி குழுமி வளர
வழக்க உணவுடன் கலந்து கொடுக்கலாமே
வளர்ச்சி பெருக்கிடும் வளமைக் கூட்டியே
தளர்ச்சி ஏற்படாமல் தடுக்குமே பிற்காலத்தில்

சுகமாய் தெரியும் பாக்கெட்டில் அடைத்திடும்
சுத்தமில்லா உணவாய் சுருக்குமே வயிற்றை
உறுதியான உடலுக்கு உணவாக பண்படுத்தி
நிறுத்துமே எதிர்காலம் நிலையாக மண்ணிலே



இயற்கை உணவை இனிதாய் உண்டு
செயற்கை மறந்து சிறப்பு சேர்ப்போமே
துரித உணவால் துயரம் சேருமே
அரிய செயலுக்கான அர்ப்ப தடையாகுமே

கூழையே குடித்து கூடியே வாழ்ந்து
ஏழ்மையைப் போக்கிட்ட ஏழிசையின் இனிமையே
தேங்கிடும் உறவுகள் தேற்றிடும் நட்பாய்
தூங்காமல் காக்கும் தூளியில் ஆட்டியே

ஒற்றுமை உணர்வை ஊட்டிடும் வளமாய்
கற்பனை இல்லா கண்ணிய குணத்தால்
சரிவிகித உணவின் சமரசம் உணர்ந்து
தெரிந்து செயல்படும் செம்மைவழி பெரியோர்களே

வயதானால் காக்கும் வசதியாய் உறுப்பினையே
தூய்மையான வாழ்வின் துணையான நலனே
மகிழ்ச்சி பொங்கிடும் மலர்ச்சியாக திரண்டு
இகழ்ச்சி நீக்கிடும் இன்னல் தவிர்த்தே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

“ ”

# உன் கையில் இனி
# என் இதயம் துடிக்கட்டும்

கவிஞர் ஏ. எம் முரீஷிதா, கண்டி, அக்குரனை



# உன் கையில் என் இதய துடிப்பு

உன் கையில் கட்டியது
கடிகாரம் அல்ல
என் நம்பிக்கையின் துடிப்பு மகனே!

ஒவ்வொரு நொடியும் சொல்லும்
நீ ஜெயிக்கப் பிறந்தவன் என்று,
கருப்பு வட்டத்தில் ஓடும் முள்ளும்
காலம் கடந்து நிற்கும்
சொல்லும்,
பாடம் ஒன்றுதான்.
நேரம் பொன்னானது,
நீயும் அப்படியே எனக்கு,



உனக்கான பரிசு அல்ல
இது
என் உறவின் பாதை
அதில் இருக்கும் முள்
நீயும் நானுமே
ஒன்று நின்றாலும் மற்றது
நேரம் காட்டாது
உன் அன்பு குறைந்தால்
நான்
வாழ்வதில் அர்த்தம்
கிடையாது.

மணிக்கட்டில் ஏறிய புது ஒளி
உன் கனவுக்கு நான் வைத்த
முதல் விதை.
நேரம் பார்க்க மட்டும் அல்ல
நேரத்தை வெல்லக் கொடுத்த பரிசு.
தோல் வாரில் கட்டித் தந்தேன்
வெறும் கடிகாரம் இல்லை மகனே!

என் உழைப்பு, என் கனவு,
என் பெருமை
உன் கையில் இனி
என் இதயம் துடிக்கட்டும்

கவிஞர் ஏ. எம் முர்ஷிதா, கண்டி, அக்குறணை


விடியலின் வணக்கமோ
இன்று அஸ்தமனத்தின்
அழிவுகளாய்
கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# காலை வணக்கம்

அலைபேசியின் வருகைக்கு பின்
தொலைந்து போன
அழகிய தமிழ் சொல்

புலனத்தில் மட்டுமே வலம்
வரும் காலை வணக்கம் பலரும்
பார்க்காத பதிவுகளாய்

ஒரு சிலரால் மட்டுமே இன்றும்
காப்பாற்றப்படும் வணக்கம்
காலை நேர கவிதை வரிகளாய்

ஆங்கிலத்தின் அரவணைப்பில்
தமிழின் காலை வணக்கம்
ஊனமான மொழிகளாய்

தமிழின் காலை நேரத்து
அடையாளம் இன்றைய
நாளில் அநாதையாய்




விடியலின் வணக்கமோ
இன்று அஸ்தமனத்தின்
அழிவுகளாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

“ இது நிலவும் இரவும் இணைந்து கண்ட கனவு ”



கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்

# இரண்டு இதயம்



அன்பின் சங்கமம்
அழகு முகத்தில்
அளவில்லா வண்ணம்
அமுது தேகத்தில்
அருகில் வந்தது
அதிசயப் பூந்தளிர்
அரும்பு மலர்ந்தது
அந்தி நேரத்தில்
அணைத்த நெருக்கத்தில்
அணைந்தது ஆதவன்

இருளில் உதயம்
இரண்டு இதயம்
இருபது விரல்கள்
இணைந்த தருணம்
இனிமை தடுமாறும்
இரவின் மடியில்
இதுவரை காணாத
இளமைப் பூமழை
இன்னிசைத் தூறலில்
இருவரும் நனைந்து

ஈருடல் வருடலில்
ஈயமாய் உருகி
ஈரமானது தேகமும்
ஈடாகாத தாகமும்
ஈரவிழிகள் நான்கும்
ஈசனின் நாளானது

உயிரின் உருவமும்
உடலின் பருவமும்
உள்ளத்து ஓடையில்
உறைந்து உருண்டது
உளவியல் கூடத்தில்
உலாவரும் ஆராய்ச்சி
உலகம் மறந்தது
உறவுகள் மலர்ந்தது
உனக்காக என்றும்
உனக்காகவே வாழும்

இது நிலவும் இரவும்
இணைந்து கண்ட கனவு
விடிந்ததும் கலைந்தது
விழித்த இரவால்

கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்

# எல்லைகள் அற்ற அந்த ஓலை வானம்!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்





பிரியங்களோடு வலம் வருதல்
நாளும் எனக்குப் பிடித்திருந்தது
ஒரு கனாக்காலத்தில்...!

கொழுமுனையில் முட்டி மோதி
கோபுரமாய் நிமிர்ந்த
ஞாபகத்தின் அடவுகள்
அலையாய் எழுந்து
ஆர்ப்பரிக்கும் வழியற்றுச்
சுருட்டிய பாயின் கீழ்
சுருண்டு கிடக்கிறது
நீ விதித்த பிரிவெனும் தண்டனையின்
தணல் சூடு தாளாமல்...!

கதியாய்க் கிடந்து
கட்டவிழ்த்துப் பறந்து
காற்றோடு கலந்து
கதை நூறு பேசி
தூறல் வானத்தோடு தொட்டுப் பேசித்
தும்பைப் பூவாய்ச் சிரித்த
எல்லையற்ற நாட்களின் ஏகாந்தம் என்னை
இழுத்துப் பிடித்து
எங்கே நிலவென முறைத்துப் பார்க்கையில்
என் இடக்கரம் இயல்பாய்
நெஞ்சை வருடிய வேளையில்
விழிக் கதவடைக்க முடியாமல்
கண்ணீர் பூத்துக் காற்றோடு அஞ்சலாகி

அந்த வேனிற்கால குறிப்புகள்
விடைபெற்றுக் கொண்டதும்
என் வாழ்வெனும் கோப்பையில்
நீரூற்றாமல் கடக்கிறது
எல்லைகள் அற்ற அந்த ஓலை வானம்!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

ஏனென்ற கேள்விக்கு எடுத்துரைக்கும் விடையாகத்
தானென்ற எண்ணத்தைத் தகர்த்தெறியும் பணிவோடு
கோனென்று கல்வியைக் கொற்றவன் போலவே
வானின்று பெய்மழையாய் வழங்குவார் கற்றோர்!


வளர்மதியை நிறைப்போரை வரவேற்று மகிழ்ந்தே
வலம்வருவார் மண்ணோர் வாழ்த்துரை அளிப்பார்!
நின்றவிடம் தன்னில் நிலைத்திடும் பெயராகச்
சென்றவிடம் எல்லாம் சிறப்பே அவர்களுக்கு!



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

நின்றவிடம் தன்னில் நிலைத்திடும் பெயராகச்
சென்றவிடம் எல்லாம் சிறப்பே அவர்களுக்கு!

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி





“தீயவரின் வெறுக்கத்தக்க செயல்களைப் பொறுப்பவரே
தூய்மை உள்ளம் கொண்ட துறவியினும் சிறந்தவரே”

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# பொறையுடைமை

01. தன்னை அகழ்பவரையும் தள்ளிவிடாமல் தாங்குகிறது நிலம்
உன்னை இகழ்பவரையும் வெறுக்காமல் ஆதரிப்பதே உன் பலம்

02. வரம்புகடந்து பிறர்செய்யும் தீமையைப் பொறுத்தல் சிறப்பு
வரமாய் அவற்றை மறத்தல் என்றும் நனிசிறப்பு

03. ஆவலோடு விருந்தினரை உபசரிக்காமல் இருப்பது வறுமையிலும் வறுமை
கோவலனின் குற்றங்களைப் பொறுத்த கண்ணகியின் குணம் வலிமையிலும் வலிமை

04. நற்குணங்கள் தன்னைவிட்டு அகலாமல் இருக்க விரும்புகிறவன்
சற்குணமாய் இருந்து எப்போதும் பொறுமையைப் போற்ற வேண்டுவனே

05. அடுத்தவரின் குற்றத்திற்குத் தண்டனை வழங்குவோரை உலகம் மதியாது
அடுக்கடுக்காய்த் தீமைகளைப் பொறுத்தவரையே பொன்போல் உலகம் போற்றும்

06. தீமை புரிந்தாரைத் தண்டிப்போர்க்கு ஒருநாள் மட்டுமே இன்பம்
ஆமைபோல் பொறுத்துக்கொள்வோர்க்கு வாழ்நாள் முழுவதும் பேரின்பம்

07. மாற்றான் தமக்குத் தீமை செய்தான் எனினும் வருந்தேல்
ஆற்றலோடு இருந்து அறம் புரிதலே நன்று

08. மனச்செருக்கினால் தீமை புரிந்தோரே ஆயினும் பரவாயில்லை
மனமுருகும் அளவிற்கு அவருக்கு நன்மை செய்யின் தீங்கில்லை



09. தீயவரின் வெறுக்கத்தக்க செயல்களைப் பொறுப்பவரே
தூய்மை உள்ளம் கொண்ட துறவியினும் சிறந்தவரே

10. உண்ணா நோன்பிருந்து தவம் செய்பவர் பெரியர்
கடுஞ்சொல்லைப் பொறுப்பவர் அத்தவஞ்செய்வாரினும் நனிபெரியர்

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

“

”

இரண்டும் எனது அடையாளம்
இன்பம் நிறைந்த என் உலகம்

கவிஞர் ஹனீஷா ஃபதின்



இன்பம் தரும் தமிழ்மொழி
இஸ்லாம் தரும் நிம்மதி வழி
இரண்டும் சேரும் என் உயிர்
இதயம் நிறையும் ஒளிவழி

தேன்சொட்டும் தமிழ்ச்சொற்கள்
தீன் காட்டும் நல்வழிகள்
இரண்டும் இணையும் பாதை
இன்பம் மலரும் நாள்தோறும்




தமிழ் என் நாவினது இசை
இஸ்லாம் என் நெஞ்சின் ஒளி
இரண்டும் சேர்ந்து வாழ்வில்
இனிமை தரும் உண்மை வழி

அன்பு சொல்லும் தமிழ்மொழி
அறம் புகட்டும் இஸ்லாம் வழி
இரண்டும் எனது அடையாளம்
இன்பம் நிறைந்த என் உலகம்

கவிஞர் ஹனீஷா ஃபதின்

# பிடித்துத் தூக்கிவிடும்
# முதல் சக்தி தாய்



கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா ரிமீஸியா, மூதூர்

# அன்பின் முகவரி



அன்புக்காகப் போராட்டம் நடக்கும்
இப்பூமியில் அன்பைப் பெற
ஏங்கிக் கொண்டிருக்கின்றன
பல நெஞ்சங்கள்

அன்பு கிடைக்காத பல
நெஞ்சங்கள் வழிமேல் விழி
வைத்து அன்புக்காகத்
தவிக்கின்றனர் இப்பூமியில்

அன்பைப் பரிமாறப் பல நெஞ்சங்கள்
அருகில் இருந்தாலும் அதனை
உதாசீனப்படுத்தும் மனிதர்களுக்கு இடையே
அன்புக்காக ஏங்கிக்
கொண்டிருக்கும் நெஞ்சம்
சிற்றளவு அன்பைக் கூடப்
பொக்கிஷமாகப்
பாதுகாக்கின்றது

இறுக்கமான மனதைக் கூட
உருக வைக்கும் மருந்தே அன்பு
அன்பின் வழியில் நம்மைக்கைப்
பிடித்துத் தூக்கிவிடும்
முதல் சக்தி தாய்



கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா றிம்ஸியா, மூதூர்

மனிதநேயத்தால் மனங்களை இணைப்பதும் புரிதலே
மானுடம் தழைக்க அடிப்படையாம் புரிதலே



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# புரிதல்

தெளிவில்லாத நிலையில் தெளிவளிப்பது புரிதல்
உள்ளதை உள்ளபடி ஏற்றிடும் புரிதல்
உறவுகளில் விரிசலைத் தவிர்த்திடும் புரிதல்
பிறரின் நிலையில் பிரச்சினைகளைப் பார்த்து
அறிவார்ந்த முடிவை எடுத்திடும் புரிதல்
காரணத்தை ஆராய்ந்து உணரவைக்கும் புரிதல்
தன்னுடைய பலம் பலவீனங்களை அறிந்திட
என்றும் துணையாக இருந்திடும் புரிதல்
பிறர் மனத்தை அறிந்திடும் புரிதல்
உரைத்திட வார்த்தையற்ற நிலையில் கண்களின்
உரையாடலைத் தெளிவாய் அறிந்திடும் புரிதல்
குற்றங்களை மட்டுமின்றி குணங்களையும் காணும்
சீற்றத்தின் பின்னிருக்கும் காயங்களைக் காணும்
உறவில் விரிசல்கள் புரிதலின்மை காரணமாய்
புன்னகை புரிந்தால் புரிதல் விரிவடையும்
புரிதல் நிகழ்ந்தால் பூசல்கள் மறையும்
அன்புக்கு அடித்தளமே ஆழமான புரிதல்தான்
உண்மையான நட்பிற்கும் உறுதுணை புரிதல்தான்
போர்கள் விலகப் புரிதலே வித்திடுமே
இருமனம் இணையப் புரிதல் அவசியமே
வேறுபாடுகளைக் களைந்து அன்பு வேர்விட
வறண்ட பூமிக்கு மழைபோல புரிதல்
இருண்ட வாழ்விற்கு ஒளியாகும் புரிதல்
பந்தங்களை இறுக்கி நெஞ்சங்களை இணைக்கும்
மந்திரச் சொல்லாகத் திகழ்ந்திடும் புரிதல்
நானா நீயா எனும் நிலையினை மாற்றி
நாமென்ற நிலையினை உருவாக்கும் புரிதல்
மனிதநேயத்தால் மனங்களை இணைப்பதும் புரிதலே
மானுடம் தழைக்க அடிப்படையாம் புரிதலே



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# கொத்தும் கோழிகள்



கவிஞர் அன்னலட்சுமிசரவணன்

சிதறிய நெல்மணிகள்
வீட்டில் உணவாகின்றன
கொத்தும் கோழிகள்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

“

காதல் ஜீவனின்
பாயும் நதியில்
மூழ்கிய உள்ளங்கள்
மகிழ்வில் உறைந்தன

”

கவிஞர் கார்த்திகா மணி





என் இதழில்
வண்ணம் குழைத்து
அவள் செவ்விதழில்
ஓவியம் வரைய

மருதாணி
பூத்தது
அவள் கன்னங்களில்

என் முகம் வழிந்த
வியர்வையை
ஒற்றி எடுத்தன
அவள் கூந்தல் முடிகள்

என் கண்ணிமையை
இழுத்துப் போர்த்திக் கொண்டன
அவளின் இரு விழிகளும்

அவளின் மெல்லிடையில்
கிறுக்கலாய் கவி எழுதின
என் கைகள்

காற்றும் வந்து
நழுவிப் போனது
அவள் தழுவலில்
என்னில் தவழ முடியாமல்

மெய் இரண்டில்
உயிர் ஒன்றாகி
நெஞ்சங்கள் துடித்தன
ஒரே சப்தத்தில்

காதல் ஜீவனின்
பாயும் நதியில்
மூழ்கிய உள்ளங்கள்
மகிழ்வில் உறைந்தன

காதல் நிமிடங்களில்
உருகிய
பனித்துளி பட்டுத்
தெளிந்து எழுந்தேன்

அடடே
இது கனவே என்று
விழித்தேன்
வியந்தேன்

கவிஞர் கார்த்திகா மணி

“ ”

**தலைமுறையோ தலையெடுக்க**
**தொலைந்தகலை மீட்போம்!**

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், (சரவணமுத்து நவேந்திரன்)



# அருங்கலைகள் மீட்போம்



அருங்கலைகள் அழிகிறதே
அவனியிலே தம்பி!
அழவில்லையே இதுகண்டு
அகமுனக்குள் தேம்பி!
பெருங்கவலை வரவில்லையோ
பேர்பெற்ற இளைஞா!
***
கரகாட்டம் கோலாட்டம்
களித்தோமே அன்று!
கோவில்களோ கலைமயமாய்
கண்டோமே நின்று!
குரவைகட்டும் கூத்துகட்டும்
குறைச்சலப்போ இல்லே!
பரதக்கலை உச்சம்பெற்று
பாரில்நிற்கக் கண்டோம்!
(இ)ரதமோடும் கோவிலிலே
ரதியாட்டமும் பார்த்தோம்!

***
வில்லுப்பாட்டும் கூத்துப்பாட்டும்
வியக்கமனம் வைக்கும்!
விடியவிடிய நடக்கும்கலைகள்
விடிந்தபின்பும் தைக்கும்!
சொல்லும்பாட்டி கதையழகில்
சொக்கியுள்ளம் திழைக்கும்!
***
தென்மோடியும் தெருக்கூத்தும்
திரும்பிப்பார்க்கச் செய்யும்!
தெருவினிலும் சனக்கூட்டம்
திரைகடலாய்த் தெரியும்!
காளையரின் 'வீரவாட்டம்'
கனவினிலும் முரசொலிக்கும்!
***

நவயுகத்தில் அநாகரிகத்தின்
நர்த்தனமே நடக்குதடாதம்பி!
நேரமெல்லாம் அந்நியக்கலை
நிர்மூலம் ஆக்குதடாநம்பி!
கவனிக்கக் கலைகளினை
கோவலர்கள் இல்லையடாநண்பா!
குடிக்கூத்தும் மதக்கூத்தும்
கூடிப்போச்சே அன்பா!
அவனியெங்கும் அருங்கலைக்கு
ஆபத்தாய்ப் போச்சே!
தலைமுறையோ தலையெடுக்க
தொலைந்தகலை மீட்போம்!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், (சரவணமுத்து நவேந்திரன்)

போதும் என்ற பொன்மனம்
அமையவே வாழ்ந்திட்டால்
மகிழ்ச்சிக்கு அளவில்லை
வாழ்விலே துன்பமில்லை!

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு



# போதும் என்ற பொன்மனம்!

காலம் நேரம் கைகூடும்
உழைப்பு என்ற மந்திரத்தால்
ஓய்வில்லா உழைப்பாலே
ஒளி பெறுமே நம் வாழ்வுதான்!

நாளை என்பது என்றுமே
நிலையில்லா ஒன்றுதான்
இன்றைய இனிய காலமே
வெற்றியின் பரிசுதான்!

நேர்மையும் உண்மையும்
நிலைத்த வாழ்வின் ஆதாரம்
உண்மை வாழ்வின் வெற்றியே
மங்காத புகழாய் ஒளிவீசுமே!

தடையில்லா வாழ்வென்று
தரணியில் இல்லையே
தடைகளைப் படிக்கல்லாய்
மாற்றும் சக்தி நம்மிடமே!

ஒருசிறு நெல்மணியே
நிறைவைத் தர
பறந்து விரிந்த வானத்திலே
பறவையும் ஆனந்தமாய்!

நாம் கூட என்றுமே
போதும் என்ற பொன்மனம்
அமையவே வாழ்ந்திட்டால்
மகிழ்ச்சிக்கு அளவில்லை
வாழ்விலே துன்பமில்லை!



கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# வாழும்போதே
# சருகாகிறது வாழ்க்கை



கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று

தாகத்தின் தவிப்பிற்கு அன்பு
தவிப்புக்கு ஒரு சொல் மருந்து
மொழிக்கு ஒரு பார்வை விடை
கனதிக்கு ஒரு மௌனம் துணை

இத்தனை இருந்தும்,
இதயத்தை இதயம்
உணர மறுக்கும் கணத்தில்
வாழும்போதே
சருகாகிறது வாழ்க்கை.



கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று

## கடமையாற்றினாலே நிரந்தரப் பதவி
## கடமை தவறினாலே கடைசிப் பதவி



கவிஞர் மு. கவிபாவன் (எ) மு. சோமசுந்தரம், சிதம்பரம்

அரசாள முதல்வர் பதவி
தரணியாள தலைவர் பதவி
உன்னையாள உன்னையே கவனி
கவனித்தாலே வரலாமே பவனி

கட்சிக்கு ஓர் பதவி
கடமைக்கு ஓர் பதவி
மூத்தவர்களுமே ஆசைப்படுவதே
சொந்தபந்தங்களுமே ஆசைப்படுவதே



பதவியென்னும் பணிவே
பணியாலே வரும் துணிவே

மெய்யுணர்ந்து ஆற்றும் கடமை
செயலாலே நீங்கிடும் மடமை

நல்லவரைப் போற்றுவதும் பதவி
செல்வந்தனாக வாழவைப்பதும் பதவி
ஆளுமைக்கென்றுமே அதிகாரப் பதவி
கொள்கைக்காக புரட்சிப் பதவி
கடமையாற்றினாலே நிரந்தரப் பதவி
கடமை தவறினாலே கடைசிப் பதவி

கவிஞர் மு. கவிபாலன் (எ) மு. சோமசுந்தரம், சிதம்பரம்


பிரிவெனும் தீயில்
விழாத சொந்தம்
பிறை நிலாவாய்
பிரகாசமாய் ஒளிரும்
கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# பிரிவெனும் தீயில் விழாத சொந்தம்

இதயத்தில் இணைந்து
இன்பத்தில் திளைத்து
உதயத்தின் ஆதவனாய்
உடலினில் தீண்டும்

நெஞ்சமெனும் சோலையில்
நேசமான மலர்களாய்
வஞ்சமின்றித் தோழனாய்
வாசமாய் வீசிடுமே



பேதமின்றிப்
பெருமை கொள்ளும்
வேதம் வகுத்த
வேட்கையான பாசம்

பிரியம் பிடிக்கும்
பிணைந்த கயிறாய்
அரிதாரமற்ற
அழகான காதல்

எதிர்ப்புகள் எண்ணற்றவை
எழுந்து வந்தாலும்
தகர்த்துக் கரம்பிடிக்கும்
தைரியமான உறவு

பிரிவெனும் தீயில்
விழாத சொந்தம்
பிறை நிலாவாய்
பிரகாசமாய் ஒளிரும்

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி


“ அனைத்துமாக அவனே இருக்கையில்
வேறென்ன வேண்டுமென
நிம்மதியாக வாழ ஆரம்பிக்கிறாள் ”
கவிஞர் சன்ஹா காஷிப், புத்தளம், இலங்கை

# உலகில் மாறியவள்



கர்ப்பிணியாகக் காத்திருந்தவள்
கருத்தரிப்பு தாமதிக்கவே
பிணியால் சூழப்பட்டாள்

சொந்தங்களின் கேள்விகள்
நொந்தவளின் பதில்கள்
முடிவிலியாய்த் தொடர்ந்தன

அவளும் பொறுமையிழந்தாள்
இனிமேலும் இப்படி
இருந்துவிட முடியாது

கட்டியவனுக்கே நான்
சலித்துவிடவில்லை இன்னும்
கடந்து போகிறவனின் கதையெல்லாம் எதற்கு?

இன்றும் பூச்சூடிவிட்டுப்
காதல் அம்பைக் கண்ணிலே அனுப்பி
மனதார மகிழ்கிறான் என்னோடிருக்கையில்

மடிமீது உறங்கச் சொல்லிப்
குழந்தைப் பட்டமும் சூட்டுகிறான்
மடிமீது தவழ்ந்து
குழந்தையும் ஆகிறான்

அனைத்துமாக அவனே இருக்கையில்
வேறென்ன வேண்டுமென
நிம்மதியாக வாழ ஆரம்பிக்கிறாள்

வாயடைத்துப் போனது உலகம்!

கவிஞர் சன்ஹாரா காஷிப், புத்தளம், இலங்கை

“ ”

இருண்ட வானில் நிலவாய் வந்து
என் வாழ்வை ஒளிரச் செய்த சூரியன்!



கவிஞர் ர. ரமேஷ் அருந்ததி, திருப்பூர்

# குறும்பு மகனே

என்னவென்று நான் சொல்வது
உன் குறும்புகளை!
வேண்டாம் என்று சொல்லும்
செயல்களைச் செய்துவிட்டு
நீ பார்க்கும் பார்வை...

பல மொழிகள் இருந்தும்
நீ பேசும் மொழிக்கு என்னவோ என்னால்
இன்னும் மொழிபெயர்ப்பு செய்ய முடியவில்லை.

நீ பாடும் ராகம் இசையின் புதிய ராகம்
கையசைவில் நீ செய்யும் சைகைகள்
நாட்டியத்தையும் தோற்கடித்துவிடும்.

பட்டுப் போன்ற உன் முகம் செய்யும்
நவரசத்தில் புதியதாய்ப் பிறக்கும் முகபாவம்!
உன் முத்துப்பற்கள் தெரியவே
நீ சிரிக்கும் சிரிப்பின் அழகு தனித்துவமே!



உன் தத்தித்தாவும் நடையழகு
நடனத்திற்கே ஒரு புதிய அவதாரம்!

இருண்ட வானில் நிலவாய் வந்து
என் வாழ்வை ஒளிரச் செய்த சூரியன்!
இல்லத்தில் நுழைந்த இளவரசன்!

அப்பா என்றொரு பட்டம் கொடுத்தவன்
விடியலின் வெளிச்சமாய் வீட்டின் குதூகலமாய்
மழலைச் சிரிப்போடு வந்தாய்
என்மடி நிறைந்த செல்வமாய்!

கவிஞர் ரா. ரமேஷ் அருந்ததி, திருப்பூர்

# அவரவர் நிலைப்பாடு
# அவரவர்க்கு
# என்ற மனமுதிர்ச்சியால்!



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

முன்னவைதான்
நேற்றைய
பேச்சு, செயல்
நடந்துகொண்ட விதம்
முகபாவனைகள்
கிடைத்த பாராட்டு
பெற்ற தோல்விகள்

அடிப்படையாய்

இன்றையவற்றுக்கும்
நாளையவற்றுக்கும்
தனிமனித அபிப்பிராயமாய்!

உண்மைகள்
வேறுவிதமாய் இருந்தாலும்
மாற்றங்கள் நிகழ்ந்திருந்தாலும்
கணக்கில் கொள்ளப்படுவதில்லை!
******************************

அந்தப்பக்கம்

நான் சொல்வதுதான் சரி
எனக்கு நல்லாத் தெரியும்
எனக்கு இதில் தெளிவு உள்ளது
நான் சொல்வதில் அர்த்தம் உள்ளது
என தன் தரப்பு நியாயங்களை
அடுக்கிக்கொண்டே போகையில்

மாற்றுக் கருத்துக்கு
ஒட்டுமொத்தமாய் மறுப்பதற்குமுன்



சொல்பவர் பற்றிய
முன் அபிப்பிராயத்தைப் புறந்தள்ளி

சொன்னவை பற்றியதைத்
திறந்த மனதுடன் உள்வாங்கினால்
கருத்து ஒற்றுமை
வருகிறதோ இல்லையோ

குறைந்தபட்சமாய்
முகச்சுழிப்பும் மனசங்கடமும்
விரோதமும் காணாமல் போகும்

அவரவர் நிலைப்பாடு
அவரவர்க்கு
என்ற மனமுதிர்ச்சியால்!

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

**க.அம்சப்ரியா ; வெளியீடு மெய் நிழல் ; முதல் பதிப்பு மே 2026 ; பக்கம் 122 ; விலை ரூபாய் 160**

**உணர்வுகளும் நிகழ்காலமும் கரம்கோர்க்கையில்....**




**சிறுகதைகளின் நோக்கம் வாசிக்கும் மனஙகளுக்குள் சமூகத்தை நோக்கிய வளர்ச்சியின் பயணத்தில் இணையச் செய்வதே ஆகும். ஒரு சிறு புள்ளி எப்படி எல்லாம் வகை வகையான கோலமாக உருவெடுக்க முடியுமோ அதைப்போல ஒரு சிறு கருத்து மனித உணர்வுகளுக்குள் எப்படி எல்லாம் பெருங்கதைகளாக விரிய முடியும் என்பதை இந்தத் தொகுப்பு வெளிப்படுத்துகிறது. பூமியில் உள்ள எல்லா உயிர்களும் சமம் என்று கருதும் பேரன்பு மிக்க மனம் முன்னேற்றத்தை விட உயிர்களின் வாழ்வியலைப் பெரிதாக பேசும். அத்தகைய கருணையை இரக்கத்தை அறச்சிந்தனையை இந்தத் தொகுப்பில் உள்ள 12 கதைகள் பேசுகின்றன..**

****திசைகளற்றவள்**

**வாகனங்கள் பெருக்கம் மக்கள் தொகை அதிகரிப்பு அதிவிரைவு வாகனங்களின் அணிவகுப்பு பொருளாதாரத்தை நோக்கிய வேகமான ஓட்டம் சக மனிதர்களைகா கண்டு கொள்ளாத தேடல் என நான்கு வழிச்சாலைகளும் 8 வழி சாலைகளும் பெருகிவரும் இன்றைய காலகட்டத்தில் இத்தகு வளர்ச்சிகள் எதை நோக்கி என்ற வினாவை நமக்குள் எழுப்ப துவங்குகின்றன. நாட்டின் முன்னேற்றம் என்பது விரைவு வாகனங்களின் பெருக்கத்தில் மட்டுமா இருக்கிறது? மக்களின் அடிப்படைத் தேவைகளும் குறைந்தபட்ச வசதிகளும் நிறைவேறும் பட்சத்தில் தேசத்தின்**

முன்னேற்றம் நிலையானதாக இருக்கக்கூடும். ஆனால் விரைவான ஓட்டத்தையே நாம் முன்னேற்றமாக நினைத்துக் கொண்டிருக்கிற சூழலில் கிராமத்துப் பெண்மணி ஒருவர் நான்கு வழிச்சாலையை கடப்பதற்கு முயற்சி செய்கிறார் அதன் வழியே தனது கிராமத்தின் மாற்றத்தை அசை போடுகிறார். ஆடி அசைந்து மெதுவாக நடைபோட்ட ஆரம்பித்த இந்த சாலை இன்று நம்மை ஒரு உயிரியாக கூட கருதாமல் ஓடிக் கொண்டிருப்பதை எண்ணி மனம் வருந்துகிறாள். எல்லா மக்களும் திசைகளற்றுப் பறந்து கொண்டிருக்கையில் அவளும் தனது திசையைத் தொலைத்து விட்டு சாலையில் தேடிக் கொண்டிருக்கிறாள். எப்பமான மன உணர்வுகளும் கால மாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாத முதுமைத்தனமும் அவளின் வினாக்களுக்கு விடை சொல்ல முடியாமல் நம்மை தடுமாற வைக்கின்றன.

**இரண்டு பறவைகள்

இன்றைக்கும் கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஏதேனும் வாகனங்களை வாங்கினாலோ அல்லது அலங்காரமான ஆடை உடுத்தினாலோ மேல் தட்டு வர்க்கம் அவர்களை ஏளனப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. நாம் எத்தனையோ சட்டங்களாலும் திட்டங்களாலும் மக்களுக்கிடையே சாதியை ஒழிப்பதற்கு மனங்களுக்குள் ஒற்றுமையை விதைத்தாலும் இன்னும் மேல் தட்டு வர்க்கம் தனது மனதளவில் பொறாமையின் ஏக்கத்தை சுமந்து கொண்டு தான் திரிகின்றன. ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண் தனது அம்மாவை வைத்து வாகனத்தை ஓட்டும் எளிய கனவை அருமையாக விவரித்துச் செல்கிறது இந்தக் கதை.

**கூலி

ஆண்டான் அடிமைத்தனத்தை வைத்து எழுதப்பட்டிருக்கும் இந்தக் கதையில் தனது பண்ணையில் வேலை செய்த தொழிலாளியின் கூலி அவனுக்கு மறுக்கப்படுகிறது தொடர்ச்சியாக அவன் அலைக்கழிக்கப்படுகிறான் ஆனால் பண்ணையார்த்தனமோ தனது வீடு வாசல் என பெருகிக்கொண்டே இருக்கிறது தனது உழைப்புக்கான கூலியைக் கேட்கும் போதெல்லாம் பணம்

இல்லை என்று வறுமைப்பாட்டு பாடப்படுகிறது பூமியை விட பொறுமையாக தனது எதிர்கால வாழ்வு சிறக்க வேண்டி காத்திருக்கும் உழைப்பாளிக்கு மனதில் வெடிக்கும் எரிமலை என்ன விளைவை ஏற்படுத்தும்? கூலி அதற்கான விடையை தருகிறது.

**ஓட்டம்

மனித வாழ்வில் பிறந்தது முதல் இறந்தது வரை தொடர்ச்சியான ஓட்டத்தில் இயங்கிக் கொண்டே இருக்கிறது நம்மில் எத்தனை பேருக்கு அந்த ஓட்டத்தின் பயன் முழுமையாக தெரிய வருகிறது எதற்காக ஓடுகிறோம்? எதை நோக்கி ஓடுகிறோம் என்ற எந்த இலக்கை நாம் முழுமையாக உணர்ந்து கொள்ள முடிகிறது இந்த கேள்விகளுக்கெல்லாம் ஓட்டம் விடை பகிர்கிறது.

**பாலைவனச் சாலை

விவசாயத்தின் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கும் கிராமத்திலிருக்கும் பெண் நகரத்தில் வந்து தனியாக குடும்பம் நடத்தும் போது தனது உணர்வுகளை எப்படி வெளிப்படுத்துகிறார் என்பதை இந்தக் கதை விவரிக்கிறது. நாம் வளர்ச்சி என்று நினைத்துக் கொண்டிருக்கும் சில விஷயங்கள் நமது அடிப்படைக் கட்டமைப்பை இல்லாமல் செய்து விடும்போது இழப்பு நமக்குத்தான் என்பதையும் இந்த கதை அறிவுறுத்துகிறது.

**மைதிலி

ஆணாதிக்கம் பெண்களை எப்படி அடிமைப்படுத்துகிறது என்பதையும் தொடர்ச்சியான அடிமைத்தனத்தில் சிக்கிக்கொண்ட பெண்கள் குடும்ப அமைப்பிலிருந்து வெளியேறும் போது அவர்கள் மனதில் ஏற்படும் விடுதலை உணர்வும் மைதிலி கதை வெளிப்படுத்தி விடுகிறது.

**காயத்ரி

ஒருவருக்கு வரும் தவறுதலான அழைப்பில் உள்ள ஒரு பெயர் அவரது வாழ்வில் ஏற்கனவே நிறைய மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறது. அந்த தவறுதலான அழைப்பு தொடர்ந்து அவரை அலைக்களிக்க வைக்கிறது நிகழ்காலமும் கடந்தகாலமும் அவரை நினைவுகளுக்குள் உலவ வைக்கிறது.

**மௌனம்

தொடர்ந்து பேசிக் கொண்டே இருப்பவருக்கு பேசாத பொழுது வாய்க்கும் பொழுது என்ன நடக்கும்? எப்போதும் கருத்துக்களில் பேசிக்கொண்டே இருப்பவர் பேச ஆளில்லாமல் சுவர்களை நோக்கிப் பேசும் மௌனத்தை இந்த கதை விவரிக்கிறது.. பேசாத சொற்களுக்கு நீங்கள் எஜமானன் பேசிய சொற்கள் உங்களுக்கு எஜமானன் என்ற பொன்மொழியை இந்த கதை வெளிப்படுத்துகிறது.

**அழைப்பு

ஒரு இக்கட்டான சூழலில் யாரிடமும் கடன் வாங்காத ஒருவர் தனது நண்பருக்காக கடன் வாங்கித் தருகிறார் கடன் வாங்கிக் கொண்டவரோ கடனைச் செலுத்தாமல் ஓடி விடுகிறார். பல காலங்களுக்குப் பிறகு அவரது மகளுக்குத் திருமணம் என்ற அழைப்பிதழ் வருகிறது. அந்த அழைப்பிதழ் அவரது எல்லா கோபத்தையும் மீண்டும் கிளறி விடுகிறது ஆனால் அவரது மகள் நேரில் வந்து திருமணத்திற்கு கட்டாயம் வர வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கையில் அவர் என்ன முடிவு எடுக்கிறார் என்பதை கதை பேரன்பை நோக்கி நம்மை சந்திக்க வைக்கிறது.

**வெளிச்சம்

கல்வியே ஒரு மனிதனின் எதிர்காலத்திற்கு நல்வழிகாட்டி. பணம்

**வெளிச்சம்

கல்வியே ஒரு மனிதனின் எதிர்காலத்திற்கு நல்வழிகாட்டி. பணம் செல்வாக்கு என எந்த பின்புலமும் இல்லாமல் வறுமையில் வாடும் மக்களுக்கு கல்வி மட்டுமே கலங்கரை விளக்கமாக அமையும். அத்தகு கல்வியைப் பெறுவதற்கு எத்தனை தடைகள் வந்தாலும் அதிலிருந்து விடுபட வேண்டும் என்பதை இந்தக் கதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

**சந்திப்பு

எப்போதும் தன்னை உயர்வாக கருதிக் கொள்ளும் பள்ளித் தோழியை பல காலத்திற்குப் பிறகு சந்திக்கும் ஒருத்தியின் நிகழ்காலத்தை இந்த கதை வெளிச்சமிடுகிறது. தனது ஆடம்பரத்தனத்தை பணக்காரத்தனத்தை இன்னும் விளம்பரம் போட்டு காட்டும் தோழியின் செய்கையை சகிக்க முடியாமல் வீடு திரும்பும் அவளது மனநிலையை இந்த கதை சிறப்பாக வெளிப்படுத்துகிறது.

**முடிவுகள்

அரசியல் நிகழ்வுகளில் இன்றும் பெண்கள் முடிவெடுக்கும் அதிகாரத்தை தனது குடும்பத்திடமே ஒப்படைத்து விடுகிறார்கள். தனித்து நின்று அரசியல் தளத்தில் தனது அதிகாரத்தை பயன்படுத்த முடியாத பெண்களின் மனநிலையை இந்த கதையின் விசாலாட்சி வெளிப்படுத்தி விடுகிறாள் ஆணுக்குச் சமமாக பெண்ணை நிறுத்தும் இந்தச் சமூகம் இன்றும் அதிகாரத்தை மட்டும் பெண்ணுக்கு ஒப்படைக்க மறுக்கிறது பெண் எடுக்கும் எந்த முடிவும் சமூகத்தின் நகர்வுக்கு சரியான ஒன்றாக இருக்காது என்று ஆணாதிக்கத் தனம் முடிவு கட்டி விடுகிறது அதன் விளைவு அரசியலில் பெண்களை முன்னிறுத்தி அதிகாரத்தை தானே கைகொள்ளும் ஆண்களை இன்றும் நாம் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்.பெண்களின் பிரதிநிதியாக விசாலாட்சி அவதாரம் எடுக்கிறாள்.

(குடும்பங்களையும் சமூகத்தையும் சிதைக்கும் ஆபத்து)வாழ்க்கை என்பது நாம் நாள்தோறும் நிம்மதியுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ வேண்டிய ஓர் அரிய வரமாகும். உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தால் மனநிம்மதியை அனுபவிப்பது கடினம். அதேபோல் மனதிற்கு ஏற்றதல்லாத சூழ்நிலைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டாலும் நிம்மதி தொலைந்துவிடுகிறது.



திருமணமான தம்பதிகள் தங்கள் பிள்ளைகளை நல்ல பண்புகளுடனும் ஒழுக்கத்துடனும் வளர்ப்பது மிக முக்கியமான பொறுப்பாகும். பிள்ளைகளின் நடத்தையில் புதிதாக ஏதேனும் மாற்றங்கள் தென்பட்டால், அவற்றை அலட்சியப்படுத்தாமல் கவனமாக அவதானிக்க வேண்டும்.

ஆரம்பத்தில் சிறியதாகத் தோன்றும் சில மாற்றங்கள் பின்னர் பெரிய பிரச்சினைகளாக மாறக்கூடும். பல நாட்கள் அல்லது மாதங்கள் கவனிக்காமல் விட்ட பின்னர், அவர்களின் நடத்தையில் வெளிப்படையான தவறுகள் தென்படும்போது, கண்டிப்பதற்கோ திருத்துவதற்கோ மிகவும் தாமதமாகிவிடலாம். எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் நெருக்கமான உறவைப் பேணி, அவர்களின் நண்பர்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் அன்றாட நடவடிக்கைகள் குறித்து அக்கறை செலுத்த வேண்டும்.

இன்றைய காலகட்டம் பல சவால்கள் நிறைந்ததாக உள்ளது. குறிப்பாகப் போதைப்பொருட்களின் பரவலும் அதன் தீமைகளும் சமூகத்தில் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளன. போதைப்பொருளின் உண்மையான தன்மையை அறியாத இளைஞர்களையும் சிறுவர்களையும் பல்வேறு வழிகளில் அதற்கு அடிமைப்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. சிலர்

சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, இலங்கை

நாம் அன்றாடம் உண்ணும் சில உணவுகளின் சுவை மீது அளவுக்கு மீறிய ஈர்ப்பு ஏற்படுவதையும் கவனிக்க வேண்டும். எல்லா சந்தர்ப்பங்களிலும் அது தவறான காரணத்தினால் ஏற்படுகிறது என்று கூற முடியாது. ஆனால், உணவு மற்றும் பானங்களில் மனிதர்களை மீண்டும் மீண்டும் ஈர்க்கும் சில தீங்கு விளைவிக்கும் சேர்மங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும் அதிகாரிகள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டியது அவசியமாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, எனது வீட்டாரும் ஒரு உணவகத்தில் விற்கப்பட்ட உணவின் சுவையை விரும்பி அடிக்கடி வாங்கி வந்தனர். பின்னர், அந்தக்கடை உரிமையாளர் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டில் காவல்துறையால் கைது செய்யப்பட்ட செய்தி வெளியானபோது, அங்கிருந்து வாங்குவதை நிறுத்தினோம். அதன் பின்னர் போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வுச் செய்திகளை வாசித்தபோது, சிலவகை போதைப்பொருட்கள் மனிதர்களின் நரம்பு மண்டலத்தைப் பாதித்து, மீண்டும் மீண்டும் அதையே நாடும் நிலைக்குத் தள்ளக்கூடும் என்பதை அறிந்தோம்.அளவுக்கு மீறிய போதைப்பொருள் பயன்பாடு உடலையும் மனதையும் சீரழிக்கிறது. அது ஒருவரின் சிந்தனை, நடத்தை, குடும்ப உறவுகள் மற்றும் வாழ்க்கையின் இலக்குகளைப் பாதிக்கிறது.

ஆரம்பத்தில் ஒரு பழக்கமாகத் தோன்றினாலும், பின்னர் அது முழு வாழ்க்கையையும் கட்டுப்படுத்தும் சக்தியாக மாறிவிடுகிறது.எனது ஊரில் 03.06.2026 அன்று நடந்த ஒரு சம்பவம் இதற்கு ஒரு துயரமான உதாரணமாகும். உடல்நலத்துடன் வாழ்ந்த ஒரு தாய் உயிரிழந்தார். அவரது மகன் நீண்ட காலமாக ஒருவகை போதைப்பொருளைப் பயன்படுத்தி வந்ததாகக் கூறப்பட்டது. அதனால் அவனது உடல்நிலையில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. பின்னர் அது புற்றுநோயாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் சந்தேகிக்கவே, மேலதிக சிகிச்சைகள் மற்றும் அறுவைச் சிகிச்சைகள் தேவைப்படுவதாகத் தெரிவித்தனர். இதற்காக மிகப்பெரிய தொகையான 18 லட்சம் ரூபாய் ($18,00,000$) பணம் செலவாக வேண்டியிருந்தது.

சஃஹ்னாஸ் பேகம், முதிலைப்பாளி, இலங்கை

குடும்பத்திற்காக உழைத்துச் சேமித்திருந்த பணத்தை மகனின் சிகிச்சைக்காகப் பெற்றோர் செலவழித்தனர். ஆனால், மகனின் உடல்நிலை மற்றும் தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் அந்தத் தாயின் மனதை மிகவும் பாதித்தன. தனது மகனின் எதிர்காலம் குறித்துத் தொடர்ந்து கவலைப்பட்ட அவர், கடுமையான மன அழுத்தத்தால் உடல்நலக்குறைவு அடைந்து பின்னர் உயிரிழந்ததாக ஊரார் கூறினர்.இந்தச் சம்பவம் ஒரு குடும்பத்தின் துயரமாக மட்டுமல்ல, சமூகத்திற்கே ஒரு எச்சரிக்கையாகவும் இருக்கிறது.

ஆரம்பத்தில் கவனிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டிருக்கக் கூடிய ஒரு பழக்கம், பின்னர் ஒரு குடும்பத்தின் நிம்மதியையும் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் சிதைத்துவிட்டது."நடக்க வேண்டியது நடக்கும்" என்று எண்ணித் தவறுகளைப் புறக்கணிப்பது சரியான அணுகுமுறை அல்ல. தீமை என்று தெரிந்த ஒன்றைத் தொடங்குவதும், அதன் விளைவுகளை அலட்சியப்படுத்துவதும் தனிநபரையும் குடும்பத்தையும் ஆபத்தில் தள்ளுகிறது.போதைக்கு அடிமையானவர்கள் தங்களின் கட்டுப்பாட்டை இழந்துவிடுகின்றனர்.

சில நேரங்களில் அவர்களைத் தடுக்க முயற்சிப்பவர்கள் மீது கோபம் கொள்வதும், வன்முறையில் ஈடுபடுவதும், தங்களைத் தாங்களே பாதித்துக் கொள்வதற்கு முயற்சிப்பதும் செய்திகளில் அடிக்கடி கேட்கப்படுகிறது. இதனால் போதைப்பொருள் என்பது தனிப்பட்ட பிரச்சினை மட்டுமல்ல, குடும்ப மற்றும் சமூகப் பிரச்சினையாகவும் மாறியுள்ளது.

எனவே பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக அமைப்புகள் மற்றும் அரசாங்கம் இணைந்து போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வை வலுப்படுத்த வேண்டும். இளைஞர்களுக்கு நல்ல கல்வி, நல்ல நட்புவட்டம், விளையாட்டு மற்றும் பயனுள்ள பொழுதுபோக்குகள் வழங்கப்பட வேண்டும். குடும்பங்களில் திறந்த உரையாடல்களும் அன்பான வழிகாட்டுதலும் அதிகரிக்க வேண்டும்.நம்முடைய உறவுகளையும் எதிர்காலத் தலைமுறையையும் பாதுகாப்பது நம் அனைவரின் பொறுப்பாகும்.

சஃஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, இலங்கை

போதையை ஒழிக்க நம்மால் இயன்ற விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வோம். ஆரோக்கியமான சமூகத்தையும் நிம்மதியான குடும்பங்களையும் உருவாக்க ஒன்றிணைந்து செயல்படுவோம்.



சஹ்னாஸ் பேகம், முதிலைப்பாளி, இலங்கை

கட்டுரை

## இளமைக் காலமும் கல்வியும்



பாரதியார் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் சின்னசாமி ஐயர் - இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சுப்பிரமணியன்.

அவரது ஐந்து வயதிலேயே தாய் காலமானதால், பாட்டியின் அரவணைப்பில் வளர்ந்தார். இளமையிலேயே தமிழின் மீது அதீத பற்று கொண்டிருந்த அவர், தனது 11 ஆம் வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றார். இவரது கவித்திறனைப் பாராட்டி, எட்டயபுர சமஸ்தான மன்னர் இவருக்கு "பாரதி" (சரஸ்வதி) என்ற பட்டத்தை வழங்கினார். அன்றிலிருந்து அவர் "சுப்பிரமணிய பாரதியார்" என்று அழைக்கப்பட்டார்.

## பத்திரிகைப் பணியும் விடுதலைப் போராட்டமும்

பாரதியார் வெறும் கவிஞராக மட்டும் முடங்கிவிடாமல், நாட்டின் விடுதலைக்காகத் தீவிரமாகப் பணியாற்றினார். 'சுதேசமித்திரன்' நாளிதழில் உதவி ஆசிரியராகத் தன் பத்திரிகைப் பயணத்தைத் தொடங்கினார். பின்னர், 'இந்தியா', 'பாலபாரதம்' போன்ற இதழ்களை நடத்தி, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகத் தனது கூர்மையான எழுத்துக்களைப் பயன்படுத்தினார்.

**இந்தியா இதழ்:** பிரிட்டிஷ் அரசின் அடக்குமுறைக்கு அஞ்சாமல், தீவிர தேசியவாதக் கருத்துக்களைப் பரப்பினார். 'இந்தியா' இதழில் அவர் வெளியிட்ட அரசியல் கேலிச்சித்திரங்கள் (Cartoons) மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தின.

திரு அ. வில்சன், இதழாசிரியர்


**பத்திரிகைப் பணியும் விடுதலைப் போராட்டமும்**

**புதுவை வாசம்:** பிரிட்டிஷ் அரசின் கைது நடவடிக்கையிலிருந்து தப்பிக்க, பிரெஞ்சு ஆட்சியின் கீழிருந்த புதுச்சேரிக்குச் சென்று, அங்கிருந்தபடியே தனது விடுதலைப் போராட்ட எழுத்துப்பணிகளைத் தொடர்ந்தார். அங்கிருந்தபோதுதான் அரவிந்தர், வ.உ.சிதம்பரனார் போன்ற தலைவர்களுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

**இலக்கியப் பங்களிப்பு (புதிய நடை, புதிய சிந்தனை)**

தமிழ் இலக்கியத்தில் பாரதியின் காலம் ஒரு மறுமலர்ச்சி காலம் ஆகும். கம்பீரமான சொற்கள், எளிமையான தமிழ், ஆழமான கருத்துக்கள் ஆகியவை இவரது கவிதைகளின் சிறப்பம்சங்கள். இவரது படைப்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

**1. முப்பெரும் காவியங்கள்:**




**பாஞ்சாலி சபதம்:** மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டாலும், இது அடிமைப்பட்டுக் கிடந்த பாரத மாதாவை (பாஞ்சாலி) மீட்பதற்கான ஒரு குறியீடாகப் படைக்கப்பட்டது.

**கண்ணன் பாட்டு:** இறைவனைத் தோழனாகவும், தாயாகவும், சீடனாகவும், காதலனாகவும் பல கோணங்களில் உருகிப் பாடிய அற்புதப் படைப்பு.

**குயில் பாட்டு:** தத்துவப் பின்னணியைக் கொண்ட ஒரு கற்பனைக் காதல் காவியம்.

**2. தேசபக்தி மற்றும் தெய்வப் பாடல்கள்:**

"அச்சமில்லை அச்சமில்லை", "பாருக்குள்ளே நல்ல நாடு", "செந்தமிழ் நாடெனும் போதினிலே" போன்ற பாடல்கள் இன்றும் தமிழர்களின் நரம்புகளில் தேசபக்தியை ஊட்டும் வரிகளாகத் திகழ்கின்றன. முருகப் பெருமான், பராசக்தி, விநாயகர் மீதும் பல பாமாலைகளைச் சூடியுள்ளார்.

**3. சமூகப் பாடல்கள்:**




குழந்தைகளுக்கான "பாப்பா பாட்டு" மூலம் அறநெறிகளையும், இளைஞர்களுக்கான "புதிய ஆத்திசூடி" மூலம் புதிய சிந்தனைகளையும் விதைத்தார்.

**சமூகச் சீர்திருத்தக் கருத்துக்கள்**

பாரதியார் ஒரு தீர்க்கதரிசி. நூறு ஆண்டுகளுக்கு முன்பே அவர் சிந்தித்த சமூகக் கருத்துக்கள் இன்றும் பொருத்தமானவையாக உள்ளன.

**பெண் விடுதலை:** "பெண்ணடிமை தீரும் வரை இந்த நாட்டில் விடுதலை சாத்தியமில்லை" என்று உரக்கச் சொன்னவர். "நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்" கொண்ட புதுமைப் பெண்ணை அவர் கனவு கண்டார்.

**சாதி ஒழிப்பு:** "சாதி இரண்டொழிய வேறில்லை" என்றும், "சாதிக் கொடுமைகள் வேண்டாமடி பாப்பா" என்றும் பாடினார். மனிதர்கள் அனைவரும் ஒன்றே என்ற சமத்துவக் கொள்கையைக் கொண்டிருந்தார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

முடிவுரை

வறுமையின் பிடியில் சிக்கியிருந்த போதும், தன் கொள்கைக்காகவும், நாட்டின் விடுதலைக்காகவும், தமிழ் மொழியின் உயர்வுக்காகவும் இறுதிவரை வாழ்ந்தவர் பாரதி. 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் தனது 38 வது வயதில் மிக இளம் வயதிலேயே இவ்வுலகை விட்டு மறைந்தார்.

அவர் மறைந்தாலும், "காணி நிலம் வேண்டும்" என்று பாடிய அந்த மகா கவிஞனின் வரிகளும், "வல்லமை தாராயோ" என்ற அவனது கம்பீரக் குரலும், தமிழும் தமிழினமும் உள்ளவரை உலகெங்கும் ஒலித்துக் கொண்டே இருக்கும். பாரதி வெறும் கவிஞன் அல்ல; அவன் தமிழ் நெஞ்சங்களின் நிரந்தர அடையாளம்!



திரு அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

ஆயிரம் முறை நீ கீழே விழுந்தாலும்

ஆயிரத்தோராவது முறை

எழுந்து நிற்பதே

உண்மையான மனவுறுதி

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே          முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு  அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு  சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :

9597887847
8870884969

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com